அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 19 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. கண்டனர் என்ற பகுசொல்லின் பகுதி
   1. காண்
   2. கண்
   3. கண்ட
   4. கண்டு

2. பாலை நிலத்துக்குரிய அகத்திணை ஒழுக்கம்
   1. ஊடல்
   2. இரங்கல்
   3. பிரிதல்
   4. இருத்தல்

3. செவ்வண்ணன் காட்டு வழியே தன்னந்தனியாக நடந்து செல்கிறான். தன்னந்தனி என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இணைமொழி
   3. இரட்டைக்கிளவி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

4. திருவாசகத்தை ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்தவர்
   1. வீரமாமுனிவர்
   2. யி. யு. போப்
   3. கார்டுவெல்
   4. இராசு பாதிரியார்

5. சிறகு என்பது
   1. வன்றொடர்க் குற்றியலுகரம்
   2. மென்றொடர்க் குற்றியலுகரம்
   3. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
   4. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

6. சேயோன் தாய்தந்தையுடன் கலைவிழாவுக்குச் சென்றான். தாய்தந்தை என்பது
   1. உம்மைத்தொகை
   2. உவமைத்தொகை
   3. அன்மொழித்தொகை
   4. வேற்றுமைத்தொகை

7. கவிதை இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும் புதிய தோற்றம் பெற்றகாலம்
   1. 12ஆம் நூற்றாண்டு
   2. 15ஆம் நூற்றாண்டு
   3. 20ஆம் நூற்றாண்டு
   4. 8ஆம் நூற்றாண்டு

1 2 3 4

8. நேற்று கடுமையான பனி பொழிந்தது. தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. இச்சொல்லியங்களை இணைக்கும் இணைப்பிடைச்சொல்
   1. ஏனெனில்
   2. ஆனால்
   3. அதனால்
   4. எனினும்

9. சிற்றாறு என்பதைப் பிரித்து எழுதினால்
   1. சிறிய + ஆறு
   2. சிறுமை + ஆறு
   3. சிறு + ஆறு
   4. சிற்று + ஆறு

10. 'நன்னூல்' என்ற இலக்கணநூலை எழுதியவர்
   1. பவணந்தி முனிவர்
   2. தொல்காப்பியர்
   3. அகத்தியர்
   4. நேமிநாதர்

11. குசினி என்பது
   1. திசைச்சொல்
   2. திரிசொல்
   3. இயற்சொல்
   4. வடசொல்

12. மகிழ்வோம் என்பதன் முன்னிலை வடிவம்
   1. மகிழ்வார்கள்
   2. மகிழ்வாய்
   3. மகிழ்வர்
   4. மகிழ்வீர்கள்

13. 'கெடுக சிந்தை கடிது இவள் துணிவே' என்ற வரிகள் வீரத்தாயின் துணிவை
   1. இகழ்கிறது
   2. புகழ்கிறது
   3. தூற்றுகிறது
   4. வெறுக்கிறது

14. அரசர் வெற்றிச்செய்தி கேட்டு கழிபேருவகை அடைந்தார். இதில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்
   1. உவகை
   2. கழி
   3. செய்தி
   4. வெற்றி

1 2 3 4

15. முகில் + கூட்டம் என்பதைப் புணர்த்தினால்
    1. முகில்க்கூட்டம்
    2. முகிற்க்கூட்டம்
    3. முகில்கூட்டம்
    4. முகிற்கூட்டம்

16. தமிழர் வழிபடும் தெய்வங்களுள் ஒன்று
    1. இந்திரன்
    2. சோமன்
    3. வருணன்
    4. கொற்றவை

17. குழந்தை அழகாகச் சிரித்தது. இச்சொல்லியத்தின் செயப்படுபொருள்
    1. அழகாக
    2. இல்லை
    3. குழந்தை
    4. சிரித்தது

18. செருமுகம் என்பதன் சொற்பொருள்
    1. போர்க்களம்
    2. போர்ப்பறை
    3. போரறம்
    4. போர்வீரர்

19. தென்னையின் இளையது பிள்ளை. அதுபோல பனையின் இளையது
    1. கன்று
    2. வடலி
    3. குட்டி
    4. நாற்று

20. உணர்ச்சிக் குறிப்புச்சொல்
    1. ஆகிய
    2. அந்தோ
    3. அன்ன
    4. ஆயினும்

21. “ஈழத்தமிழரை ஆதரிக்கிறேன் என் தலை கொய்யினும் கொய்க” எனக் கூறியவர்
    1. மறைமலை அடிகள்
    2. பாவேந்தர்
    3. பாரதியார்
    4. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

1 2 3 4

22. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர் புணர்ந்த சொல்
    1. காட்டாறு
    2. வீட்டுப்பாடம்
    3. காட்டுவழி
    4. சோற்றுப்பானை

23. புகலிட இலக்கியங்களுள் முதன்மை பெற்றுவரும் இலக்கிய வடிவம்
    1. புதினம்
    2. கட்டுரை
    3. கவிதை
    4. நெடுங்கதை

24. மூத்தோர் சொல்லைக் கேட்டு நடப்போம். இச்சொல்லியத்தின் தோன்றா எழுவாய்
    1. அவர்கள்
    2. நாங்கள்
    3. நீங்கள்
    4. நான்

25. 1500ஆம் ஆண்டுகளில் ஆரியர் வாழ்ந்த இடம்
    1. மொசப்பத்தேமியா
    2. அரப்பா
    3. மொகஞ்சதாரோ
    4. வேங்கடம்

26. கலையரசிக்கே கட்டுரைப்போட்டியில் முதலிடம் கிடைத்தது. இதில் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்
    1. வினா
    2. எதிர்மறை
    3. பிரிநிலை
    4. எண்

27. மணிப்பிரவாளம் என்னும் மொழிநடை
    1. தமிழும் ஆங்கிலமும் கலந்தது
    2. ஆங்கிலமும் வடமொழியும் கலந்தது
    3. தமிழும் பாளியும் கலந்தது
    4. தமிழும் வடமொழியும் கலந்தது

28. சொற்றொடர்கள்
    1. முழுமையான கருத்தை உணர்த்தாது.
    2. காலத்தை வெளிப்படையாகக் காட்டும்.
    3. முழுமையான கருத்தை உணர்த்தும்.
    4. தனித்து இயங்கும்.

1 2 3 4

29. மக்களுக்காகக் கவிதை பாடும் முறையை முதலில் உருவாக்கியவர்
    1. பாரதியார்
    2. மீனாட்சிசுந்தரம்பிள்ளை
    3. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
    4. நாமக்கல் கவிஞர்

30. வான்நிலா என்பதில் மறைந்துள்ள வேற்றுமை உருபு
    1. ஐ
    2. கு
    3. கண்
    4. இன்

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பண்டையகாலத்துப் பெண்கள் எப்படிப்பட்ட உளவீரம் கொண்டவர்களாக இருந்தார்கள்?

2. ஐரோப்பியரது வருகையால் தமிழிலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களுள் இரண்டை எழுதுக.

3. ஈழத்தில் போர்ச்சூழலில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் எவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டிருந்தன?

4. 'தமிழரது வாழ்வியலில் ஆரியம் இன்றும் பெருமளவு விரவியுள்ளது.' இக்கூற்றைப் பற்றிய உங்கள் கருத்தை எழுதுக

5. கூடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு ஒவ்வோர் சொல்லியம் எழுதுக.

பெயர்: ______________________________________________

______________________________________________

வினை: ______________________________________________

______________________________________________

6. தொடர்ச்சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________________________

______________________________________________

7. தரப்பட்டுள்ளவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

வினைத்தொகை: ____________________ இரட்டைக்கிளவி: ____________________

அகச்சுட்டு: ____________________ கெடுதற்புணர்ச்சி: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

**எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. தோள் கொடுப்போரே! தோழர்களே!

**அல்லது**

2.



**பாடலுக்கான பொருளுரையை எழுதுக.**

3. ஆலமர மீதமர்ந்து கிளி இசைக்கும்
அதுகேட்ட இளம் மந்தி அபிநயக்கும்
நீலமலர் தலையசைத்துக் குடை பிடிக்கும்
நீரிலுள்ள தவளையெல்லாம் தரைக்கு எழும்
கோலமெல்லாம் உனக்கென்றே ஓடிவரும்
குருவியொன்று பேடையொடு கூடிவரும்
காலமகள் உனக்காக மேடையமைப்பாள்
கவலையில்லை கவின்மயிலே ஆடியிருப்பாய் (10 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் தன்னிறைவு கண்ட ஒரு குமுகத்தின் அடுத்த நிலை வளர்ச்சியானது, வணிகத்தை நோக்கி நகர்வதாகவே இருக்கும் என்பது உலகப் பொது வழக்கு. இதற்கேற்ப தமிழர் வரலாறு பல்வேறு வணிகச் சிறப்புகளைக் கொண்டுள்ளது. வணிகத்தின் இயல்பு எனப்படுவது பொருள்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல், கொடுத்து வாங்குதல் போன்ற பண்புநலன்களின் அடிப்படையில் தோன்றும். இத்தகைய வணிக இயல்பைத் தமிழிலக்கியங்கள் போற்றுகின்றன. அத்துடன் வெளிநாட்டார் குறிப்புகள், செப்பேடுகள், கல்வெட்டுகள், அண்மைக்கால அகழாய்வுகள், ஆழ்கடல் கண்டுபிடிப்புகள் போன்றனவும் தமிழரின் உலகளாவிய வணிகச் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. கடலையும் பயண வழிகளையும் பொறிமுறைகளையும் நன்கறிந்த தமிழர்கள் காற்றின் துணைகொண்டு பெருங்கடல்களைக் கடந்தனர். தமிழர் அறுவகைத் தொழில்களையும் சிறப்பாகப் போற்றினர். அவை உழவு, வணிகம், நெசவு, தச்சு, மட்கலம் செய்தல், இரும்புத் தொழில் என்பவையாகும். இவற்றுள் உழவுக்கு அடுத்து வணிகமே இடம்பெறுவதைக் காணலாம். தமிழர் வரலாற்றில் வணிகர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. சிறந்த வணிகர்கள் 'எட்டி' என்னும் பட்டம் பெற்று அரசர்களால் மதிப்பளிக்கப்பட்டனர். எனவே, தமிழர் வணிகத்தைப் பண்பாட்டின் ஒரு கூறாகவே போற்றி வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

(10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

உணவு உண்ணும்போது தொலைக்காட்சி பார்த்தல், கைத்தொலைபேசியைப் பயன்படுத்துதல் போன்ற பழக்கங்கள் எம்மில் பலருக்கு உண்டு. இன்று பத்து அகவைக்கு உட்பட்ட குழந்தைகளிலிருந்து இப்பழக்கம் தொடங்குகிறது. இவ்வகையான பழக்கங்கள் உடல் கோளாறுகளுக்கு வழிவகுக்குமென மருத்துவர்கள் கூறுகிறார்கள். அதாவது, பார்வைக் கோளாறு, உடல் பருமன், உணவுச் செரிமானத் தொல்லைகள், மன அழுத்தம் போன்ற பல வகையான நோய்களுக்கு இப்பழக்கங்கள் வழிவகுக்கின்றன. உணவு உண்ணும்போது உண்பதில் கவனம் செலுத்தத் தவறும் நிலையில் அதனை மென்று சாப்பிடாமல் விழுங்குவர். உணவு செரிமானமடையாத நிலையில், மூச்சுத் திணறலும் ஏற்பட வாய்ப்புண்டு. எம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாமல் தனி உலகில் வாழும் ஒரு நிலைக்கு இப்பழக்கமானது எம்மைத் தள்ளிவிடும். எனவே, உணவு உண்ணும்போது உணவில் கவனம் செலுத்துவதுடன் அதைச் சுவைத்து உண்ணும் பழக்கத்தையும் தவறாமல் கடைப்பிடிப்போம்.

(10 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. புதுக்கவிதை
2. தமிழரது வாழ்வியலில் ஆரியரின் ஊடுருவல்
3. மொழிக்கலப்பு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - முள்ளிவாய்க்கால் இறுதிப்போர்
   - காணாமல் ஆக்கப்பட்டோர்
   - இலங்கை அரசின் திட்டமிட்ட தமிழின அழிப்புச் செயற்பாடுகள்

4. தாயக உறவுகளுக்குக் கைகொடுப்போம்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - தாயகத்தின் இன்றைய நிலை
   - தேவைப்படும் உதவிகள்
   - புலம்பெயர் இளையோர் உதவக்கூடிய வழிகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

### வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

நோபல் பரிசு ஒன்றுதான் தேசம், மொழி என எல்லைகளைக் கடந்து வழங்கப்படுகிறது. இப்பரிசின் மூலம் ஆறு வெவ்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பினைச் செய்தவர்கள் ஆண்டுதோறும் மதிப்பளிக்கப்பட்டு வருகிறார்கள். நோபல்பரிசானது, உருவாகுவதற்கு ஓர் ஆற்றலே காரணமாக இருந்துள்ளது. அவ்வாற்றல் என்பது 'டைனமைட்' என்னும் வெடிமருந்தாகும். 1866ஆம் ஆண்டு அதைக் கண்டுபிடித்தவர் சுவீடன் நாட்டு அறிவியலாளர் அல்பிரட் நோபல் என்பவராவார். கிரேக்க மொழியில் டைனமைட் என்றால் ஆற்றல் என்று பொருள். இக்கண்டுபிடிப்பு பல தொழில்களுக்கு வரப்பேறாக அமைந்தது. நிலத்தைச் சமப்படுத்தவும் மலைகளைக் குடைந்து பாதைகளை அமைக்கவும் பழைய கட்டடங்களைச் சில மணித்துளிகளில் தகர்க்கவும் டைனமைட் பயன்பட்டது. இவ்வகையில் ஆக்கத்திற்காகத் தான் உருவாக்கியதை அழிவுக்காகச் சிலர் பயன்படுத்தியதைக் கண்டு நோபல் மனம் நொந்தார். தனது செல்வத்தையெல்லாம் உலக நன்மைக்காகப் பாடுபடுபவர்களுக்குப் பரிசாக வழங்க முடிவு செய்தார். அதுதான் நோபல் பரிசாகும். 1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. 5 துறைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இப்பரிசு 1969 இலிருந்து பொருளியல் என்ற புதிய பகுதியையும் சேர்த்துக் கொண்டது. அழிவு ஆற்றலைக் கண்டுபிடித்த பரிசு என்று கூறாமல், இது அறிவாளிகளை மதிப்பளிக்கும் பரிசு என்று உலகம் போற்ற வேண்டும் என்று விரும்பினார் அல்பிரட் நோபல். அவரது எண்ணம் வீண்போகவில்லை. இந்நோபல் பரிசை வழங்குவதன் மூலம் அவரை உலகம் இன்றும் நினைவுகூருகின்றது.

1. நோபல் பரிசை உருவாக்கிய அறிவியலாளர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? (2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

2. 'டைனமைட்' இன் பயன்பாடுகள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

3. நோபல் ஏன் மனம் நொந்தார்? (2 புள்ளிகள்)

4. எந்த ஆண்டில் புதியதுறை சேர்த்துக் கொள்ளப்பட்டது? அப்புதிய துறை எது? (2 புள்ளிகள்)

5. நோபல் பரிசு தொடக்கத்தில் எத்தனை துறைகளுக்கு வழங்கப்பட்டது? (1 புள்ளி)

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- சத்துணவுத்திட்ட சிறப்புக் கலைமாலை
- பெண்கள் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்
- பெண்கள் விழிப்புணர்வுப் பேரணி
- அடையாள உண்ணாநோன்புப் போராட்டம்

1. ______________________________

'பெண்கள் நாட்டின் கண்கள்' என்பர். இன்று அத்தகைய கண் போன்ற பெண்கள் பல வழிகளிலும் இடர்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். கல்வியிலும் நாகரிகத்திலும் மேம்பட்ட மேற்குலகில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அனைத்துலகப் பெண்கள் நாளன்று இது தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நடைபெற உள்ளது. பன்னாட்டுப் பெண்களும் கலந்து கொள்கிறார்கள். நீங்களும் பெண்களுக்காகக் குரல் கொடுக்க அணிதிரளுங்கள்!

2. ______________________________

பெண்கள் ஓர் உயிரை இவ்வுலகுக்குக் கொண்டுவரும் உயரிய பணியைச் செய்கிறார்கள். எம் தாயகத்தில் இவ்வாறு ஓர் உயிரைச் சுமக்கும் தாய்மார்கள் பலர் போதிய ஊட்டச்சத்து உணவுகள் இன்றி அல்லல்படுகிறார்கள். பாரதிகலைக்கூடம் அவர்களின் துயர்துடைக்க முன்வந்து சிறப்புக் கலைமாலை ஒன்றை நடத்தவுள்ளது. கலைமாலைக்கான நுழைவுச்சீட்டை வாங்கி, உங்கள் பங்களிப்பைச் செலுத்த முன்வாருங்கள்!

3. ______________________________

அரச படையினரால் ஈழத்தமிழர் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். தம் உறவுகளை இழந்து இன்றும் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை இழந்த தாய்மார்கள், தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால், சிங்கள அரசு அதைக் கண்டும் காணாது இருக்கிறது. தாயகத் தாய்மார்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதற்காக எமது விளையாட்டுக்கழகம் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தை முன்னெடுக்கிறது. தாய்மார்களின் துயர்துடைக்க அனைவரும் கலந்துகொள்வோம்!

(3 X 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |